RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s22231

# சமூகவியல் நோக்கில் சங்க இலக்கியங்கள்

**ஆ. அந்துவான் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

# Sangam Literature in Sociological View

**A. Andhuvan [a, *]**

[a] Department of Tamil, Erode Arts and Science College, (Autonomous), Erode-638009, Tamil Nadu, India

* Corresponding Author:
aanthuvansamed@gmail.com

Received: 17-09-2022
Revised: 20-10-2022
Accepted: 02-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

It is essential to explore the Sangam era in harmony with nature. It is special to highlight the sociological elements that emerge in Sangam literary works. In Sangam Literary works, we can read the sociological ideas that are compatible with nature. Man sought both wealth and knowledge in outer life. They were engaged in agriculture and trade to earn wealth. There are also reports that ancient people gave importance to various arts and they proved their physical ability in sports. This article vividly captures those sociological ideals that were followed in Sangam era.

**Keywords:** Sangam Literature, Sociological, Nature, knowledge

## முன்னுரை

இயற்கையோடு இயைந்த சங்க வாழ்வியலை ஆராய்வது இன்றியமையாதது. ஒவ்வொரு சங்க இலக்கியத்தையும் எடுத்துக் கொண்டு அவற்றில் வெளிப்படும் சமூகவியல் கூறுகளை எடுத்துக் காட்டுவது சிறப்புடையது. இவற்றில் இயற்கையோடு இயைந்த சமூகவியல் சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. மனிதன் புற வாழ்வில் செல்வம், அறிவு என இரண்டையும் தேடினான். செல்வம் ஈட்ட மக்கள் வேளாண்மை, வணிகம் இவற்றை மேற்கொண்டனர். பண்டைக் கால மக்கள் பல்வேறு கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த செய்திகளும் காணக் கிடக்கிறது. விளையாட்டிலும் வீரத்தை வெளிப்படுத்தும் போக்கு இங்கு நோக்கத்தக்கது.

## நட்பு

நட்பு என்னும் சொல்லுக்கு “ஒத்த கருத்து நலன், அக்கறை முதலியவற்றின் அடிப்படையில் பொதுவாக உறவினர் அல்லாதவருடன் கொள்ளும் உறவு” என்கிறது க்ரியாவின் தற்காலத் தமிழகராதி.

இராமன் மேல் கொண்ட நட்பின் திறத்தால் தன் இதயத்தைத் திறந்து காட்டினான் அனுமன். இதே போல,

“எந்தை! வாழி ஆதனுங்க! என்

நெஞ்சம் திறப்போர் காண் குவரே”

என்கிறார் ஆத்திரையனார் எனும் புலவர். ஆதனுங்கன் என்னும் வள்ளலிடம் தான் கொண்ட நட்பின் மிகுதியை வெளிப்படுத்துகிறார் (Subramaniyan, 2010).

## காதல்

உள்ளத்தில் உண்டாகும் காதல் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னாரிடத்தில் தான் தோன்றும் என்று சொல்ல முடியாது. அக்காதலுக்கு உரியவர் எவரோ அவர் எதிர்ப்படும் போது அது தானே தோன்றி அமையும். இருவருக்கும் உறவுமுறை கிடையாது. செம்மண் நிலத்தில் பெய்த மழையானது அந்நிறத்தைப் பெற்றது போல காதலர் இருவரும் ஒருவரோடு ஒருவர் கலந்து விட்டனர். இக் கருத்தினை,

"யாயும் ஞாயும் யாரா கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (Subramaniyan, 2010)

என்ற பாடல் விளக்குகிறது. மக்களிடத்தில் இரு பெரும் பண்புகள் அன்று முதல் இன்று வரை வாழ்ந்து கொண்டிருக்கிறது. அவை வீரமும் காதலும் ஆகும். மனிதன் தோன்றும் பொழுதே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வீரப்பண்பும் தம் மெய்யுணர்வுகளுக்கு உணவாகக் காதல் பண்பும் கொண்டு விளங்கினான்.

"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின்

பிறப்புப் பிறிதாகுவ தாயின்

மறக்குவென் கொல் என் காதலன் எனவே" (Subramaniyan, 2010)

என்ற நிலையிலும் இருந்துள்ளன. "உலகத்தின் எல்லா மொழித் தோட்டங்களிலும் காதல் மலர்கள் அன்றாடம் பூத்துக் கொண்டு தான் இருக்கின்றன" என்கிறார் கு.வெ.பா.

## திருமணம்

ஆண்டுக்கு ஒருமுறை வேங்கை பூக்கின்ற காலமும் திங்களைச் சுற்றி ஒளிவட்டம் சூழும் காலமும் திருமணம் செய்வதற்குரிய காலமாகக் கருதினர் என்பதை,

"வேங்கை விரிவு இடம்நோக்கி

வீங்கு இறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே" (Subramaniyan, 2010)

எனும் வரிகளால் அறியலாம். மேலும் சங்க காலத்தில் திருமணம் நடைபெறுவதற்கு முன்பு முல்லைப்பூச் சூடுவது பண்பாட்டிற்கு எதிரானதாகக் கருதப்பட்டது.

"தோழி நாம் காணாமை உண்ட கடுங் கள்ளை மெய்கூர

நாணாது சென்று நடுங்க உரைத்தாங்கு

கரந்ததூஉம் கையொடு கோட்பட்டாம் கண்டாய்நம்

புல்லினத்து ஆயர் மகன் சூழ வந்தது ஓர்

முல்லை ஒரு காமமும் கண்ணியும் மெல்லியால்" (Subramaniyan, 2010)

என்கிறது. இப்பாடலில் தலைவன் கொடுத்த மாலையைத் தலைவி கூந்தலில் சூடிக் கொண்டாள். தலையில் வெண்ணெய் தடவ வந்த செவிலி கூந்தலை விரித்த போது முல்லை மாலை கீழே விழுந்தது. அதனால் அவள் நடுங்கினாள். அதாவது திருமணமான பெண்கள்

முல்லைப்பூச்சூடுவதும் திருமணமாகாத பெண்கள் வேறு பூக்களைச் சூடுவதும் அக்கால மரபாக இருந்துள்ளது.

## இல்லறம்

இல்வாழ்க்கையில் பெண்கள் முதன்மையானவர்களாய் இருந்தனர். இல்வாழ்க்கையைத் திறமையுடன் நடத்த வேண்டிய முறைப்படி நடத்தினால் அதைக் காட்டிலும் இனிய வாழ்வு வேறில்லை என்பதை

“மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின்

இனியவும் உளவே” (Subramaniyan, 2010)

ஏன்கிறது குறுந்தொகை. “தலையில் ஒரு பலாக்கனியைச் சுமந்து கயிற்றின் மேல் நிலைதவறாமல் நடப்பது தான் இல்வாழ்வு” என்கிறார் கலைஞர்.மு. கருணாநிதி.

## உணவுமுறை

சங்க காலத்தில் தமிழர்கள் இயற்கை உணவினையே அதிகளவில் உண்டனர். வரகு, சாமை, தினை, மூங்கிலரிசி, மரக்கறி, தினைமா(நுவணை) ஆகியனவாகும். மேலும் பழவகைகள், ஆடு, கோழி இறைச்சி உணவாகத் திகழ்ந்தன.

உணவு சமைப்பதற்கு மண்பானையையும் உணவு உண்ணுவதற்கு வாழையிலையையும் பயன்படுத்தியுள்ளனர். வாழையிலையில் உயிர்ச்சத்தும் பிராணவாயுவும் நிரம்ப உள்ளதால் தமிழர்கள் பழங்கால முதலே வாழையிலையைப் பயன்படுத்தியுள்ளனர்.

இதனை,

“சாந்த விறகின் உவித்த புன்கம்

கூதளங் கவினிய குளவி முன்றில்

செழுங்கோள் வாழை அகல் இலைப் பகுக்கும்

ஊராக் குதிரைக் கிழவ”

என்ற புறநானூற்றுப்பாடலால் அறிய முடிகிறது (Subramaniyan, 2010).

## நீராடல்

மனதிற்கும் உடலுக்கும் புத்துணர்வு தருவது நீராடல். மனதைச் சுத்தம் செய்ய வழிபாடு மேற்கொண்டனர். மக்கள் நீராடுதலுக்கென தனி ஆடை, அணிகலன்களை அணிந்தனர். அவற்றில் “நீரணி” என்ற சொல் நீராடுதலுக்குப் பொருத்தமான அணிகலன்களைக் குறித்தது. நீராடுதலைத் “தீர்த்தமாடுதல்” எனவும் குறிப்பர். பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பரதவர் சினைச்சுறவின் கோட்டினை நட்டு வழிபட்டுப் பின்னர் புகார் முகத்தே காவிரி கடலோடு கலக்குமிடத்தில் தங்களது பழவினை நீங்கக் கடலாடியதை

“தேறுநீர்ப் புணரியோடு யாறுதசை மணக்கும்

மலியோதத் தொலிகூடற்

றீது நீங்கக் கடலாடியும்

மாசுபோகப் புனல்படிந்தும்” (Uruttiran Kannanar, 1996)

என்கிறார். தை நீராடல் மணமாகாத இளம்கன்னிப் பெண்கள் மார்கழி மாதம் முழுமதி நாள் தொடங்கி தை மாதம் முழுமதி நாள் வரை நீராடி நோன்பிருப்பர்.

## விருந்தோம்பல்

விருந்து பேணுதல் தமிழரின் தலையாய பண்பாடு. சுற்றத்தார்க்கு மட்டுமின்றி முன்பின் தெரியாத அயலவர்க்கும் தம்மிடம் உள்ள சிறந்த உணவை விருந்தாக அளித்து மகிழ்ந்தனர்

“விருந்து பெருகு நன்போலும் திருந்திழை

அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின்

மெல்லியல் குறுமகள்” (Subramaniyan, 2010)

என்ற பாடலடிகள் விருந்தோம்பும் பண்பாட்டை வலியுறுத்துகின்றன. பண்டங்கள் குறைவாக இருந்தாலும் கவலை கொள்ளாமலும் மனங்கோணாமலும் இல்லத்தலைவி விருந்தோம்பல் செய்தாள் என்பதை,

“தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்

நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்

இற்பொலி மகடூஉப் போல” (Subramaniyan, 2010)

என்கிறது புறம். விருந்தினரை “மெல்லியர்” என இலக்கியங்கள் சுட்டுகின்றன.

கார்கால தொடக்கத்தில் குளிர்காற்று வீசும் வேளையில் பிச்சைக்கேட்டு வந்தவர்களுக்கு வெண்சோற்றுடன் செம்பு நிறைய வெந்நீரைத் தந்து உபசரித்துள்ளதை அறிய முடிகிறது.

“ஆசுஇல் தெருவின் ஆசுஇல் வியன்கடை

செந்நெல் அமலை வெண்மை வெள்இழுது

ஓர்இல் பிச்சை ஆர மாந்தி,

அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்

சேமச் செப்பில் பெறீஇயரோ, நீயே” (Subramaniyan, 2010)

மேற்கண்ட பாடல் விருந்தினரை எங்ஙனம் உபசரிக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

## ஆடை

பண்டைக் காலத்தில் பருத்தி பயிரிடப்பட்டது என்பதை,

“கல்சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்

தாழி முதல்கலித்த கோழிலைப் பருத்தி”

“காஞ்சியின் அகத்துக் கரும்பருத்தியாக்கும்

தீம்புனல் ஊரன்” (Subramaniyan, 2010)

என்ற பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. செல்வந்தர்கள் பருத்தியாடையும் பட்டாடையும் அணிந்திருந்தனர் என்று இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

“பட்டு நீக்கி துகில் உடுத்தும்”

“கொட்டைக் கரைய பட்டுடை” (Uruttiran Kannanar, 1996) என்று பட்டாடை பற்றிக் கூறுகின்றன.

## ஈகை

செல்வம் உடையவர் இல்லாதவர்க்கு வழங்குவது ஈகை. வறுமை நிலையிலும் தாம் பெற்ற பொருளைப் புலவர் பெருஞ்சித்திரனார் மனைவியிடம் சுற்றத்தார்க்குப் பகிர்ந்து கொடுக்கச் சொல்கிறார்.

“இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது

வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்

எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே” (Subramaniyan, 2010)

## கலை

கட்டிடங்கள் கட்டுவதற்கு நல்ல நாள் குறித்துத் திசைகளையும் நோக்கி நுண்ணியதாக கயிறிட்டுக் கட்டிட நூல் கூறும் இலக்கணப் படி கட்டினர் என்பதை,

“நூலறிவு புலவர் நுண்ணிதில் கயிறிட்டுத்

தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்

பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து” (Uruttiran Kannanar, 1996) என்கிறது நெடுநல்வாடை.

## கல்வி

“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே” (Subramaniyan, 2010)

இப்பாடல் கல்வியின் சிறப்பு, கற்க வேண்டியதன் இன்றியமையாமை, கற்கும் முறை, அனைவர்க்கும் கல்வி பொதுவானது போன்ற உயர்ந்த கல்விச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றது.

## நடுவுநிலை தவறாமை

குற்றத்திற்குத் தீர்ப்பு வழங்குவோர் நடுவுநிலைமையோடு நின்று தீர்ப்பு வழங்க வேண்டும். இதை உணர்த்தும் பாடல்,

“முறையுடைய அரசன் செங்கோல் அவையத்து

யான்தற் கடவின் யாங்கு ஆகுவது கொல்?

பெரிதும் பேதை மன்ற

அளிதோ தானே இங்அழுங்கல் ஊரே?” (Subramaniyan, 2010)

## மகளிர் மற மாண்பு

ஆயர்குலப் பெண்கள் களவு வாழ்க்கையில் ஈடுபட்டாலும் கற்பு நிலையை அடைய தன் தலைவன் காளையை அடக்கி வெற்றி பெற வேண்டும் என்ற இயல்பு உடையவர்களாக இருந்தனர். இதனை,

“கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்

புல்லாளே ஆய மகள்” (Subramaniyan, 2010)

எனும் வரி விளக்குகிறது. மேலும் இவர்கள் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பதை,

"பேரூருஞ் சிற்றூருங் கௌவை எடுப்பவள்போல்

மோரோடு வந்தாள் தகைகண்டை யாரோடும்" (Subramaniyan, 2010)

எனும் வரிகள் விளக்குகின்றன.

## வேளாண்மை

விலங்குகள் வேளாண்மையின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இருந்துள்ளன. "கேழல்" என்பது பன்றியாகும். பன்றி கிளறிய இடத்தில் புல் வளர்வதைக் குறவர்கள் உற்று நோக்கினர். இதுவே வேளாண்மையின் ஆரம்ப நிலையாகும். இதனை,

"கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை

விளைந்த செறுவின் தோன்றும் நாடன்" (Subramaniyan, 2010)

## போர்

போரில் ஒருவரை ஒருவர் பகை கொண்டு கொல்லுதல் இயற்கை என்பதை,

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்

புதுவது அன்று: இவ்வுலகத்து இயற்கை" (Subramaniyan, 2010)

என்கிறது புறம். போரிலும் அறத்தை பின்பற்றியவர்கள் மறத்தமிழர்கள்.

## வாணிபம்

விற்பனை செய்யும் பண்டங்களின் விலையையும் இலாபத்தையும் வெளிப்படையாகக் கூறி வியாபாரம் செய்வார்கள் என்று பட்டினப்பாலை கூறுகிறது.

"கொள்வதூஉம் மிகை கொளாது

கொடுப்பதூஉங் குறை கொடாது

பல்பண்டம் பகர்ந்து வீசும்" (Uruttiran Kannanar, 1996)

என்று வணிகர்களின் நேர்மையையும் நடுவுநிலையையும் எடுத்துக் காட்டுகின்றது. சங்க காலம் வெளிநாட்டு வணிகத்தில் சிறப்புற்று விளங்கியது.

## முடிவுரை

அறிவு வளர்ச்சிக்குக் அடிப்படையான கல்வி சங்க காலத்தில் சிறப்புற அமைந்திருந்தது. விருந்தோம்பல், ஈகை இரண்டும், இல்லாதோர்க்குச் சேவை செய்யவே. நட்பும் காதலும் வாழ்வுக்கு மிக அவசியம். நீதி நடுவுநிலை தவறாது வழங்கப்பட்டது. வாணிபத்தில் சுங்கவரி விதிக்கப்பட்டது. நீராடலும், உணவின் முறையும் உடல் ஆரோக்கியத்திற்கு அவசியம். பெண்கள் வறுமையிற் செம்மையாகவும் போர்க்களத்தில் மறமகளிராகவும் செயல்பட்டனர். வேளாண்மையும் வணிகமும் இரு கண்களாகக் கருதப்பட்டது. இவ்வாறு அக வாழ்விலும் புற வாழ்விலும் செம்மையுடன் வாழ்ந்தவர்கள் சங்கத் தமிழர்கள் என்பதை இக் கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

## References

Subramaniyan, S.V. (2010) Sanga Ilakkiyam (Ettuthogai Mulamum Theliuraiyum) 3rd Vol, Manivasagar Pathipagam, Chennai, India.

Uruttiran Kannanar, (1996) Pattinappalai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License